பிரதம செயலாளர் செயலகம்,வடக்கு மாகாண சபை
ප්‍රධාන ලේකම් කාර්යාලය, උතුරු පළාත් සභාව
Chief Secretary's Secretariat, Northern Provincial Council

187,ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
187,ආඩියපාදම්පාර, තිරුනෙල්වෙලි, යාපනය.
187,Adiyapatham Road, Thirunelvely, Jaffna.

Telephone : 021 222 0843 (Dir)
: 021 222 0840 (Gen)
Fax : 021 222 0841
Website : www.np.gov.lk
e-mail : chiefsecnpc@gmail.com

**My No: NP/09/FRM/CIR/2014** **Date: 16.01.2014**

மாகாண நிதிச் சுற்றுநிருப இல: PF/03/2014

மாகாண செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வட மாகாணம்.

<u>2014 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளின்படி</u>
<u>அரச சேவையிலுள்ள வாழ்க்கைச் செலவுப்படியின் திருத்தம்</u>

37/2013ம் இலக்கமும் 2013.12.31ம் திகதியும் கொண்ட பொது நிர்வாக சுற்றுநிருபத்திற்கு அமைவாக வடக்கு மாகாண சேவையிலுள்ள அலுவலர்களின் வாழ்க்கைச் செலவுப் படியினை பின்வருமாறு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

1. சேவையிலுள்ள அரச அலுவலர்களின் வாழ்க்கைச் செலவுப்படியானது 2014.01.01ம் திகதியிலிருந்து அமுலிற்கு வரும் வகையில் ரூபா.7,800/= ஆக இருத்தல் வேண்டும்.

2. அமைய/நாளாந்த கூலி அடிப்படையில் சேவையாற்றும் தொழிலாளர்களிற்குச் செலுத்தப்படும் நாளாந்த வாழ்க்கைச் செலவுப்படியானது 2014.01.01ஆம் திகதியிலிருந்து அமுலிற்கு வரும் வண்ணம் ரூபா.260/= ஆக இருத்தல் வேண்டும்.

3. கௌரவ ஆளுநர், கௌரவ முதலமைச்சர், கௌரவ அமைச்சர்கள் மற்றும் கௌரவ உறுப்பினர்கள் ஆகியோரின் தனிப்பட்ட அலுவலர்களிற்கும், பிரதம செயலாளர் அவர்களின் ஒருங்கிணைப்புச் செயலாளரிற்கும் மேற்படி பந்தி 01இன் ஏற்பாடுகளிற்கமைய வாழ்க்கைச் செலவுப்படியானது செலுத்தப்படுதல் வேண்டும்.

4. இந்த சுற்றுநிருபத்திற்கு அமைவாக வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவுகளுக்கான <u>வருடாந்த ஒதுக்கீடு அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டில் போதாமல் இருக்குமிடத்து</u> குறைநிரப்பு கோரிக்கையினை உரிய நியாயப்படுத்தல்களுடன் அமைச்சர் வாரியம் மாகாண சபை மற்றும் கௌரவ ஆளுநர் அவர்களது அனுமதியினைப் பெறுவதற்காக அனுப்பி வைத்தல் வேண்டும். <u>குறைநிரப்பு கோரிக்கை முறையாக அனுமதிக்கப்படும் போது மாத்திரமே</u> தாங்களிற்குரிய <u>கட்டுநிதி எல்லை மீளமைக்கப்படும்.</u>

ர.விஜயலட்சுமி
பிரதம செயலாளர்

பிரதிகள்:-

1. கௌரவ ஆளுநரின் செயலாளர் - வ.மா - கௌரவ ஆளுநர் அவர்களுக்கு அறியத் தருவதற்காக
2. உதவிக் கணக்காய்வாளர் நாயகம் - வ.மா } தகவலுக்காக
3. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் - வ.மா } தகவலுக்காக